## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண். 110/2021**

2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய கஸ்தூரிபாய் **PW.1** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 25.11.2024

| | | | |
|---|---|---|---|
| Name | : கஸ்தூரிபாய் | | |
| Husband Name | : கலியபெருமாள் | Court | : |
| Village | : தில்லையாடி | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 76 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் 1ம் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

15.03.2010 தேதியிட்ட 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.